முருகப்பெருமான் துணை

**மகான் ஜெகநாதர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.11.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. மும்மலக் குற்றம் அகற்றி
முழுமை ஞானம் மக்களிடை
செம்மைபட அருளவந்தநல்
சிவராஜ யோகியே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது தேள்திங்கள்
வரங்களென லாபதிகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 ம் நாள் 27.11.2022, ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை ஜெகநாதர் யானும்
அருளுவேன் உலகநலம்காண
ஆசிதனை அரங்கமகான் தனை
அனுகிப்பெறும் மக்கள் வாழ்வில்
4. வாழ்வில் மாற்றமும் ஏற்றமும்
வருங்காலச் செயல்களில் திடமும்
தாழ்விலா நற்குணமும் அறிவும்
தயவும் பெருமைமிக்க வாழ்வும்
5. வாழ்வுமாக ஆற்றல் கூடும்
வறுமை கட்டம் விலகி ஓடும்
தாழ்வான நிலையும் விலகி
தவசிகள் மகான்கள் மேலான
6. மேலான வழிபாடு நம்பிக்கை
மேலும் பெருகி ஆசிகளும்
காலமதில் வரமாகக் கிட்டி
கட்டமில்லா வாழ்வுமாகத் தேறும்
7. தேறுமே குடும்பநல ஓர்மை
தேவைகள் யாவும் பூர்த்திபட
மாறுமே சகல வழிகளிலும்
மனம்போல் வெற்றி காணும்
8. காணவே அரங்கன் திருவடி
கலியில் ஞானம் தேடிவருபவர்க்கு
ஞானத்திருவடியாம் உண்மைபட
நம்பிக்கை வைத்துவிட உலகில்
9. உலகில் வேறுமார்க்கமில்லை
உண்மைபட மக்களிடை மாற்றம்
வேலவனே தந்து மீட்பார்
வெற்றிபட எல்லாக் காரியமும்

10. காரியமும் குருவருளால் தேறி
கந்தனே சூட்சுமமாக வந்து
தைரியமும் தக்க துணையுமாக
தரணியில் வெற்றி அருள்வார்

11. அருளவே அரங்கமகான் தரும்
அனுகூலம் உலகம் அடைய
இருளெனும் மனிதர் ஆட்சி முடிந்து
இனிதே ஞானிகள் ஆட்சி துவங்கும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—